# அம்மா



அமரர்.பரம்சோதி சிவகுருநாதன்

அவர்களின்

நினைவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளை கொல்லன் கலட்டியை

பிறப்பிடமாகவும் மானிப்பாய் சங்குவேலி

தெற்கில் வாழ்ந்து தற்போது

112, கந்தசாமி கோயில் வீதி,

திருக்கோணமலையில் வசித்துவந்தவரும்

**அமரர். சண்முகம் சிவகுருநாதர்**

(ஓய்வு பெற்ற நில அளவை உதவி அத்தியட்சகர்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய

தர்ம கர்த்தா சபை முன்னாள் தலைவர்)

அவர்களின் துணைவியார்

# திருமதி. பரம்சோதி சிவகுருநாதர்

## அவர்களின்

## நினைவு மலர்

## 20.12.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது வாழ்க்கையின் எல்லாமாக
இருந்து எமைக் காத்து,
எம்மை நிறைத்த அம்மாவே!
எங்கள் நினைவுகளாக மாற்றப்பட்டு விட்ட
உங்களை நீங்கள் எங்களுக்குத் தந்ததை
எங்களுக்குச் சொன்னதை
எங்களுக்காக விட்டுச் சென்றதை
எல்லாம் நீள நினைந்து இம் மலரை
உங்கள் பாதங்களுக்கு
காணிக்கையாக்குகின்றோம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி



## அமரர்
## திருமதி. பரம்சோதி சிவகுருநாதர்

எங்களுக்காய்
17.10.1928

ஈசனுக்காய்
05.12.2013

### திதி வெண்பா

விஜய வருஷம் பாவை கார்த்திகை
உத்திர நட்சத்திரம் - உத்தமியாள்
பரம்சோதி பரமனின் தாள்
தலைப்பட்டாள் துணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்



விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவனென்றடியார்
        தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
        மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
        நுழைதரு நூனிர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
        கோணமா மலையமர்ந் தாரே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
        அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
        புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
        செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனெப் பிடித்தேன்.
        எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுலகை தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவா ளுமைகோனடியெமக்
கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் மின்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழிருக்க வென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர் தருந் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாம் சிவமயமே!

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்,
பையலென்ற போதே பரிந்தெடுத்துச், - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை,
எப்பிறப்பிற் காண்பே னினி?

முந்தித் தவங்கிடந்து, முந்நூறு நாளளவும்
அந்திபக லாச்சிவனை யாதரித்துத், - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன்?

வட்டிலுந், தொட்டிலிலு, மார்மேலுந், தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து — முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறலிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்துபெற்று, நோவாம லேந்திமுலை
தந்து, வளரத்தெடுத்துத் தாழாமே — அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்?

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல், - உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பு
மானே எனவழைத்த வாய்க்கு

அள்ளி யிடுவ தரிசியோ? தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் - மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை யிட்ட தீ முப்பு ரத்திலே;
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்;
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே;
யானு மிட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் : வெந்துபொடி சாம்ப
லாகுதே, பாவியே னையகோ! — மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுக்க கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ! — சந்தமும்
உன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யின்றெடுத் தாய்.

வீற்றிருந்தா ளன்னை: வீதிதி லிருந்தாள்!
நேற்றிருந்தாள் ; இன்று வெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள்! எதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

பட்டினத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தடம்



ஈழத்திருநாட்டின் வடதிசையில் சைவத்திற்கும், தமிழிற்கும் தனிப்பெருமை தரும் நன்னகராய், யாழிசைக்கோர் இணையறு இருப்பிடமாய் இயைந்து கொண்டிருக்கும் யாழ்நகரில் நீர்வளமும், நெல்வளமும், தெவிட்டாத தேன்வளமும் பெற்று இலங்கும் தெல்லிப்பளையைச் சேர்ந்த கொல்லங்கலட்டி எனும் ஊரிலே Dr.செல்லப்பா தங்கமுத்து எனும் தம்பதியருக்கு இரண்டாவது மகவாய் அன்னார் 1928.10.17 அன்று வந்ததுதித்தார். முன்னே சிவசோதியும், பின்னே மலர்சோதி, ஜெய்சோதி, இராமச்சந்திரனும் உடன் சோதரராய் ஜனனித்தனர். இலங்கை அப்போது ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப் பட்டிருந்ததால் தன் உடன்பிறப்புக்களோடு யாழ்ப்பாணம் ராமநாதன் கல்லூரியில் ஆங்கிலமொழிமூலமான கல்வியைக் கற்றுயர்ந்தார். கல்வியில் மட்டுமல்லாது ஒழுக்கத்திலும், பெரியோர்க்கு கீழ்ப்படிந்து நடக்கும் அடக்கத்திலும், கன்னியர்க்குரிய கடமையைச் செவ்வனே செய்யும் அறத்திலும் அன்னார் சிறந்து விளங்கினார்.

தகுந்த திருமண வயது வந்ததும் யாழ்ப்பாணம் சங்குவேலி மானிப்பாயைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான சண்முகம் இளையபிள்ளை தம்பதியினரின் செல்வ மகனாம் அன்பும் பண்பும் மிக்க குணவாளன் அமரர் சிவகுருநாதர் (நிலஅளவை உதவி அத்தியட்சகர்) அவர்களை 1948.08.28 அன்று தனது வாழ்க்கைத்துணையாகக் கரம் பிடித்தார். புகுந்த வீட்டுக்கோர் பொக்கிஷமாய்த் திகழ்ந்த அன்னாரிற்கு சிவக்கொழுந்து, சாம்பசிவம் என்போர் மைத்துனராய் வாய்க்கப்பெற்றனர். திருமணமாகி ஐந்து வருடங்கள் குழந்தைப் பேறு இல்லாமல் வருந்திய அன்னாரின் துயர் தீர்க்கும் பொருட்டு முத்த மகவாய் யசோதா வந்து பிறக்க அதைத் தொடர்ந்து சிவபாலன், வாசுகி, அனுசுயா, தேவகி என அவர் குலம் தழைத்தது. தன் மக்களிற்கு சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுத்து சமூகத்திற்கு நற்பிரஜைகளை ஈந்த பணியில் தன் கணவரோடு தோள் நின்று செயற்பட்டார். தன் மகனை பொறியியல் துறையில் நிபுணத்துவம் பெற்று வர சோவியத் ரஷ்யாவிற்கு அனுப்பி வைத்து அகங்களித்திருந்த நிலையில் அவரது மகனின் மரணச்செய்தி இடியென வந்து இறங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமிருந்து பெற்ற ஒரே மகனின் முடிவு அவரை மனதளவிலும், உடலளவிலும் பெரிதும் தளரச் செய்தாலும் தன் ஏனைய பிள்ளைகளுக்காக அவற்றை எல்லாம் தாங்கிக் கொண்டு கடமைகளைத் தொடர்ந்தார். பெற்றோர்க்குரிய கடமைகளை உற்ற காலத்தில் நிறைவேற்ற எண்ணி யசோதாவிற்கு ஸ்ரீஸ்கந்தனையும், வாசுகிக்கு தர்மராஜனையும், அனுசுயாவிற்கு ஜனகனையும் தேவகிக்கு ஜெயமனோகரனையும் மணம் செய்வித்து மகிழ்ந்தார். அதன் பயனாக கஜன், கஜானி, சரண்யா, சாரங்கன், ஆதித்யா, சுஜீவன், விபீஷணா ஆகிய பேரப்பிள்ளைகளை பெற்று அவர்களை அன்புடன் அரவணைத்து, அமுதூட்டி அழகுப்பார்த்தார். தம் இறுதிக் காலத்தை திருகோணமலையில் கழித்து வருகையில் 63 ஆண்டுகளாய் நடத்திய இல்லறம் முடிவுற அவரது கணவர் சிவகுருநாதர் சிவபதமடைந்தார். தன் துணைவரை இறுதிக்காலம் வரையும் எவ்வித குறையுமில்லாமல் பார்த்து வழியனுப்பி வைத்து, அந்த வழியை தான் தேடிச் செல்லும் காலத்தை எதிர்பார்த்து காத்திருந்தார்.

இடையில் தனது மூத்த பேரன் கஜனின் திருமணத்தைக் கண்டு மகிழ்ந்து கடல் கடந்து வாழும் சொந்தங்களையும் நேரில் சந்தித்து அளவளாவி இத்துணையும் போதுமென்று நினைத்து மனத்திருப்தியுடன் தான் பிறர்க்கொரு சுமையாக இருக்கக் கூடாது எனும் உறுதியான எண்ணத்துடன் 2013.12.05 அன்று சொந்தங்கள் உடனிருக்க மாலை 3 மணியளவில் இறைவன் தாளோடு இரண்டறக்கலந்தார்.

ஓம் சாந்தி.. ஓம் சாந்தி.... ஓம் சாந்தி........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிரான அம்மா

எம்மில் பலர் இந்த மானிட பிறவி எடுத்ததன் நோக்கம் என்னவென்று முழுமையாக உணராமலே ஏன் நினைத்துக் கூட பார்க்காமலே வாழ்ந்து முடித்து விடுகிறார்கள். மிகச் சிலரே தம் கடமையை செவ்வனே செய்த திருப்தியோடும் மனச்சாட்சியோடு வாழ்ந்தோம் என்ற எண்ணத்தோடும் மரணத்தை தழுவுகின்றார்கள். அந்த மிகச்சிலரில் எமது அம்மாவும் ஒருவர் என்றே நாம் நினைக்கிறோம். மரணம் ஒரு போதும் எமது அம்மாவை அச்சத்திற்கு உள்ளாக்கியது இல்லை. எமது தாயார் அடிக்கடி சொல்வார், எமது வாழ்க்கை புத்தகத்தை திறந்து பார்த்தால் அதில் குற்ற உணர்வுகளுக்கு இடம் இருக்க கூடாது என்று. நாம் அறிந்தவரை அவர் கடவுளிடம் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டதில்லை. மனச்சாட்சியே கடவுள், அன்பே சமயம் என்று வாழ்ந்தார்.

எமக்கு இன்னொரு மானிடப்பிறவி என்று ஒன்று இருந்தால் இதே தாய் தந்தையருக்கே மீண்டும் பிறக்க வேண்டும் என்பது எமது பேரவா. ஆனால் எமது உள்ளுணர்வு எம் அம்மாவிற்கு இதுவே கடைசி பிறப்பு என்கிறது. காரணம் அவர் கடைப்பிடித்த உயர் விழுமியங்கள் அவரை ஒரு உன்னதமான தாயாக மட்டுமல்லாமல் ஒரு அதி உன்னதமான மானிடப் பிறவியாகவும் உருவாக்கி இருந்தது. அவருக்கு இனி ஒரு பிறவி எடுக்க வேண்டிய தேவை இருக்க முடியாது என்பதே பலரது அபிப்பிராயம்.

பலர் எம்மிடம் கேட்டிருக்கின்றார்கள், உங்கள் அம்மா ஒரு முகாமையாளராகவோ அல்லது அதிபராகவோ இருந்தாரா என்று. வெளித்தோற்றத்திற்கு மிகவும் நலிந்த உடலுள்ளவராக இருந்த போதும் அவரது மனவலிமையையும் ஆளுமையையும் அவருடன் சில நாட்கள் பழகியவர்கள் கூட அறிந்திருந்தார்கள். தள்ளாத வயதிலும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய வேற்று மொழிகளிலும் கூட அவரால் சரளமாக கதைக்க கூடியதாக இருந்தது. அவர் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் ஒரு மேம்பட்ட நிலையில் இருப்பதற்கு எமது தாயாரின் அன்பு நிறைந்த கண்டிப்பும் தூர நோக்கும் பின்னால் நடக்க போவதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரே அநுமானிக்கும் திறமையும் முக்கிய காரணங்களாக இருந்தன. எமது பெற்றோர் எத்தனையோ சவால்களை சந்தித்த போதும் ஒரு நிறைவான வாழ்க்கையை மிகவும் அன்பான சூழலில் வாழ்ந்தவர்கள் என்றே கூற வேண்டும். அவரின் மருமக்கள் நால்வரும் எமது பெற்றோருக்கு மகனை இழந்த குறையை முடிந்த அளவு தோள் கொடுத்து தீர்த்து வைத்தார்கள். அதிலும் ஜனகன் கடைசிவரை எமது தாயாரை தமது தாயார் போன்றே கவனித்து எல்லா கடமைகளையும் அன்போடு செய்தார். கடைசி மருமகனான ஜெயமனோகரன் அவுஸ்திரேலியா போகும் வரை பெற்றோருடனே இருந்து அவர்கள் தமது வீட்டிலேயே இறுதிவரை இருக்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள்.அவர் விரும்பிய படியே எமது பெற்றோரும் கடைசி நாள் வரை திருக்கோணமலையில் பெருமையுடன் அவர் கட்டிய வீட்டிலேயே வாழ்ந்தார்கள்.

எமது தாயாருடன் தொலைபேசியில் ஒவ்வொரு முறை கதைக்கும் போதும் கடைசி இரண்டு தடவையாவது சொல்வார். "I have been very satisfied you know. God had given me everything I needed. There is absolutely nothing to complain".

இல்லை இல்லை என்று புலம்பும் இவ்வுலகில் கிடைத்ததை வைத்து திருப்தியுடன் வாழத் தன்னை இசைவாக்கிக் கொண்டார்.

யமனை பலமுறை விரட்டிய நீங்கள் இம்முறை நீங்களாகவே கடவுளிடம் உங்களை ஒப்படைக்க தீர்மானித்தீர்கள் என்றே நாம் நினைக்கிறோம். ஆனால் நீங்கள் விட்டுச் சென்ற வெற்றிடம் மட்டும் யாராலும் நிரப்பமுடியாது. உங்கள் நினைவுகள் நிச்சயமாக எம்மை தொடர்ந்து சீரான பாதையில் வழிகாட்டும்.

உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்

பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அலைகள்
# ததும்பும் வேளையில்......



பிறப்பும் இறப்பும்
உலகநியதி என்றாலும்
மறக்க முடியாது
உங்கள் நினைவுகளை

இல்லத்தின் இருள்
அகற்றினீர்கள் அன்று
எல்லோர் இதயமும்
இருட்டாகிப்போனது இன்று

உம் வெற்றுடல்
கண்டு ஆறாது எங்கள் மனது
எம்மைப் போன்றே
உடன் பிறவா உறவுகள்
பதைபதைக்க சிவமாய்
வாழ்ந்த நீங்கள் ஜடமாய்
போனதேனோ?

தெய்வமாய் விண்ணுலகில்
வாழ தினந்தோறும் புனித மலரால்
அர்ச்சிக்கின்றோம்.

என்றும் மதியாதைக்குரியவராய்
எம் அனைவருக்குள்ளும் வாழ்ந்து
கொண்டிருப்பீர்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- சுந்திரம்பிள்ளை குடும்பம் -


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் அம்மம்மாவே......



என் அம்மம்மா! எனது வாழ்க்கையிலே மறக்க முடியாத ஒரு நபர். நான் எனது அம்மாவின் மடியில் புரண்டதை விட அம்மம்மாவின் மடியில் புரண்டது தான் அதிகம். வற்றாப்பளையில் அவரின் கரங்களில் துள்ளித் திரிந்த அந்தப் பசுமையான தருணங்கள் இன்னும் என் நினைவில் பசுமரத்தாணியாய்! தேசம் அறியாப் பாலகனாய் திருமலை மண்ணில் தடம் பதித்த போது நேசக் கரம் நீட்டி பல்கலையும் கற்றுத் தந்தவர். பாடசாலைக்கு அனுப்பி விட்டு வழிமேல் விழிவைத்து "சாரங்கன்" வந்துவிட்டானா? என்ற தவிப்போடு அவர் வாசலில் காத்து நிற்பதும் என் முகம் கண்டதும் அவர் வதனம் அன்று மலர்ந்த தாமரை போல பூப்பதும் இன்னும் என் மனதில் அழியாச் சித்திரங்கள்.

அறியா வயதில் தாத்தாவுடன் நடக்கும் சீண்டல்களில் நான் தவறு செய்திருந்தாலும் பழி அவரின் தலையில் தான். அவர் என்மீது சீண்டுவதை அம்மம்மா கண்டுவிட்டால் போதும், தத்தாவின் கதி அன்றைக்கு அம்போ தான். இவ்வாறான பசுமையான நினைவுகளை இனி எமக்குத்தர யார் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் கட்டாயம் சூப் கறியும் பின் அறுசுவை தின்பண்டங்களும் சாரங்கனுக்கு!.... இல்லை சாரங்கனுக்கே..... என்று நீங்கள் அள்ளித் தெளித்தவற்றில் தான் இன்று பள்ளிச் சிறுவனாய் வளர்ந்து நிற்கிறேன்.

கதை சொல்வது எப்படியென்று உங்களைப் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்கே உரிய பாணியில் குரலில் ஏற்ற இறக்கங்களுடன் குடும்ப வரலாறுகளை ஒப்புவிக்கும் போது ஒரு வீரப் பெண்மணியாய் நீங்கள் மிளிர்ந்ததை நான் கண்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் கண்டிப்பான அன்பு, வழிகாட்டல்கள், பழக்க வழக்கங்கள், பண்புகள், ஒழுக்கம், நட்பு இவை எல்லாம் எம் வாழ்வில் ஒவ்வொர் தருணமும் கதை பேசும்.

எனது வாழ்வில் ஓரிரு தருணங்களை தவிர உங்கள் முகம் பாராமல் இருந்ததில்லை. ஆனால் இனி உங்களை Photo வில் மட்டும் தான் பார்க்கலாம் என்று நினைக்கும் போது என்னால் தாங்க முடியவில்லை.

உங்கள் Walker உம் Paper cuttings சும் நீங்கள் மறைந்தாலும் உங்களின் குரல்பாடும் எச்சங்களாய் எம்மிடம்! என் கல்வியின் முன்னேற்றத்தில் அயராது பாடுபட்டு என் வெற்றிகளை பலபேரிடம் கதைத்துப் பேசி என்னை பெருமைப்படுத்திய என் அன்பு அம்மம்மாவே நீங்கள் இல்லாமல் தொடரப்போகும் எனது வாழ்க்கைப் பயணத்தை இனி நீங்கள் தெய்வமாய் நின்று, ஆசீர்வாதிக்கப் போகிறீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றேன்!

உங்களின் பேரன்
சாரங்கன்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அம்(மம்)மா



எட்டரை தசாப்தங்கள்!
ஏட்டறிவு மாந்தரால்
எட்டமுடியா இலக்கு - நீங்கள்
எளிதாகக் கடந்தீர்கள் - இன்று
இறையோடு இணைந்தீர்கள்

அன்புப் பூம்பொழில்கள்
பண்புப் பெட்டகங்கள்
அனுபவ ஆழ்கடல்கள்
சிந்தனைச் சுரங்கங்கள்
என அடக்க முடியா அம்சங்களைக் கொண்டு துலங்கிய சோதி
இன்று இகம் நீங்கி பரம் தேடி சென்றுவிட்டது.

நடைதாங்கியுடன் சேர்ந்த உங்கள் வாழ்வு - மற்றையோரின்
சுமைதாங்கியாகவும் இலங்கியிருக்கிறது.

அம்மம்மா!
தாய்மையின் தனிவடிவு
தியாகத்தின் திருவுருவு என
உங்களை அலங்கரிக்க அடைமொழிகளைத் தேடுகின்றேன்.
அவை பிடிகொடுக்காமல் ஓடிவிடுகின்றன
தாம் தகுதியற்றவை எனும் நினைப்பால்

"அம்மா" என அழைத்ததற்கும்
"அம்மம்மா" என அழைத்ததற்கும்
எவ்வித வேற்றுமையும் உணர்ந்ததில்லை நான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் இன்று இந்த விளிப்புக்கள் வெறுமையாக
விரக்தியின் விளிம்பில் வழிசோர நிற்கின்றன.
உரிமையான உங்களின்
செல்லக்கோபங்கள், சின்னச்சிணுங்கல்களை
இடைவிடாது ரசித்திடவே
தினமும் உங்களைச் சீண்டிப்பார்த்திருக்கிறேன்.

இப்போது அந்தச் சீண்டல்களுக்குப்
பதிலளிப்பது உங்களின் புகைப்படப் புன்னகை
மாத்திரமே என்பது நிரம்பமுடியாத
துளையாக துளிர்த்துவிட்டது என் நெஞ்சில்

ஜீரணிக்கமுடியவில்லை எனினும்
மரணத்தின் மாறாத நியதி கருதி - உங்கள்
வழிகாட்டல்களின் வழியே
வலியோடு பிரார்த்திக்கின்றேன்
தாங்கள் ஆத்மசாந்திக்காய்.

அன்புடன்
ஆதித்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The sister I had

I look up to my sister as one of the best gifts I had in my life.

I have no words to say how she was to me. In one word, she was a life of sacrifice. Her family was all the world to her. Always ready to help anyone, no matter in what situation.

In her village back home, I have seen her carrying soup and "பத்தியக்கறி" to old and sickly neighbours. So I see Mother Teresa in her. Her life style and actions were an inspiration to me. Whenever I talk to her, there was always something new I learn. Though not religious, she stands above all that when I had difficulties. I could only confide in her.

She was a good listener she has some power to console, pull me up to go forward with confidence. Though for away, there was a closeness between her and me, she was an example of perfection.

I always wonder how this frail simple and humble sister of mine could carry a large heart.

I cannot even imagine that this beautiful life is taken a way from this world.

The sister who meant so much to me was a dedicated wife and a mother who was looked up with pride. Her exemplary children show proof of her greatness. She is a role model not only in her family, but to the extended family and all around her.

The fragrance will be there forever. I will not miss her. She will be with me always. She will have a sacred place in heaven as a wanted child of God.

Rest in peace.

**Sister, Sivasothy Nagamany**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AMMAMMAH

With the absence of my parents, who were away pursuing careers and completing education, I had the priviledge of being raised under the watchful eye of my grandparents. In this regard, my Ammammah was one of the most influential figures of my childhood. Having successfully raised five children of her own, she had all the tools and skills to tackle a rambunctious first grandchild.

As nothing less than a second mother, there wasn't a moment when her eyes and ears were not alert to what I was up to. Ammamah had an uncanny ability to be a stern and methodical disciplinarian as well as a soothing, gentle and maternal voice of reason for a child. In direct contrast to the stereotypical role of most grandparents as passive and loving observers who enjoy spoiling their grandchildren, she was a motherly figure who shared a special bond with all her grandchildren.

I look back fondly with nostalgia and reflect with pride on this unassuming individual who intimately shaped our family and those around her with an unspoken and unwritten attitude which can be best described as "elegance in simplicity".

You have lived an exemplary life.

Rest in Peace Ammammah

**Gajan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY DEAR AMMAMMA

My grandmother was a delightful woman. There was nothing pretentious or over the top about her. She did not tolerate nonsense and had no time for useless questions. She did not want to answer the question about how she was doing but wanted to know about my life, my cousin's life and my family's life. She wanted to hear that everything she had worked hard for had resulted in a better life for her children and grandchildren.

There was not a selfish bone in her whole body. She lived her life giving and caring right up to the last moment. Her mind was as sharp as a blade even in old age. Her thoughts were eloquently expressed while her humour was on point. She was truthful, but never harsh, funny, but never mean-spirited, opinionated, but always open-minded.

She raised her children to be valuable members of society, to give more than they take. I see the results every day in my mother. I now realise that her resilience, leadership ability and level headedness are traits passed down from my grandmother.

My best memory of my grandmother has to be the first time I saw her in ten years. I did not expect to immediately feel the love I felt for her in that moment. Every moment with her felt precious.

Her approval meant the world to her family. Thumbs up from her confirmed that the endeavour you pursued was justified. She did not fear death. She only referred to it as an eventuality she would face bravely. She was not afraid to speak about it.

My dear Ammamma, I love you so much. You have touched my heart and you made a huge impact on me in the short time we had together.

Rest in Peace

**Sharanya**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PERIMAMI FROM MY PERSPECTIVE

Mami was the first bride to come into our family. From then on she had her own way of dealing with us - nephews and niece. My younger brother and I were very thrilled to have this mami.

Mami in general being a reserved person fitted into Sanguveli neighbourhood with much ease and composure. She was fondly addressed as 'Sivaguru Pensaathi' and became very popular among our relatives and neighbors.

Apart from taking care of household chores like supervising the helpers at home, looking into children's homework etc, she enjoyed cooking for others reading and find the time to sit down for a chat sipping coffee. We greatly enjoyed her delicious dishes. She set aside time for herself and always made it a point to drape a nice saree in the evenings and visit us with her little ones.

During my teenage years whenever they visited Jaffna, mami - being a movie fan will take us to selected Tamil movies. This was a treat for us, because movie going was a no no at our home.

I was in Sanguveli in 1986/87, about this time they installed the 'Panchamuga Pillayar' at the maruthady temple. Abishekams and poojas were going on round the clock for a mandalam.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I was lucky to attend the festivities with Mami and Mama. Mama was the 'Tharmakartha' at the time. Mami being the 'Tharmapaththini' has to accompany mama to receive the first kalanchu for the day. This was an honorary and proud sight for me to watch.

Mami with her determination discipline and self confidence led a life to its fullest. She followed mama like a shadow, supporting and caring for him.

I was touched when I heard you say "Adikadi kathayum, neerum Gunamum eppothum engalukku oru thani idam".

Mami, I never heard you complain about anything, you led a life the way you always wanted. We will miss you and we will always cherish you in our thoughts.

**Affectionate niece**
**Gowri**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY AMMAMMA

Ammamma was an important person in my life and I regret that I only ever had the opportunity to be with her twice since we moved to Australia. When I first went to Sri Lanka in 2004, I was not at an age to understand Ammama as well as I would now but I knew from Anna, Amma and Appa their experience of life with Ammamma, and the family stories, so meeting her was exciting for me at that time.

After a gap of 8 years, I was fortunate enough to spend time with Ammama earlier this year. In the ten days I spent with her, she told Anna and me a variety of different stories about us, particularly about the time we lived with her in my first two years of life.

We thank God for giving us the opportunity to meet Ammama before her departure.

**Vibushana**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IN LOVING MEMORY OF AMMAMMA



While I never had the opportunity to live with Ammama for any period, I did get the chance to spend some quality time with her during the past two summers. And for that, I feel truly blessed.

What I discovered in Ammama was an uncanny spirit full of wisdom, wit, patience and incredible fortitude. In old age, she handled her physical woes with resolute humour and the utmost grace.

I cherish those few weeks when I was able to go to her bedside in the mornings and converse with her about academic ambitions, family relationships, old memories or whatever topic came to mind between the two of us. During those few weeks my knowledge of Tamil grew considerably and I found myself connecting with my native tongue and culture in a way I never was able to before in Canada. At the end of our stay in Sri Lanka last summer, Ammama whole-heartedly gave my mother her approval on how my mother had raised us, "You have brought up two beautiful, smart daughters and you should be proud of them". That single statement easily left all three of us choked up and it meant more to me than Ammama would ever know.

I recall having to stop myself in mid-sentence whenever I attempted to ask about her wellbeing during phone conversations. Her remark (always full of vivacity) was to


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

say, “I’m old! What do you expect the answer to be?” Her reply had the effect of bringing laughter rather than tears to my eyes. Ammama was determined not to burden her loved ones with her own symptoms or worries. It was a trait she was born with.

Even as a young mother, Ammamma was the invisible glue that held the family together – she made it look easy, managing every household detail, her husband’s happiness and her children’s needs. She really was the ideal partner for Thatha, as they complemented each other.

My mother has said on more than one occasion that in her next life she dreams of having Ammama as her mother again since no other woman can embody such intelligence and compassion. What Ammama displayed was the rare quality of selflessness – something that is uncommon these days.

So, while I grieve her loss and wish I had been able to spend more time with her, I also jubilantly celebrate her life and legacy. It’s rather intimidating to attempt to follow in her footsteps, but I do hope that one day I can touch the lives of loved ones around me half as well as Ammammma did for my sister and me from half-way round the world.

**Kajahni**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AMMAMMA'S LASTING INFLUENCE

Ammamma has been an instrumental part of my life and very often has been a pillar of strength and a source of moral advice not just for me but for all her daughters and sons, for that's how she treated her sons-in-law.

I will always remember the particular way she brought me up until the age of seven. Every lunchtime meal would consist of a 'sarakku curry' followed by a much-anticipated treat of a small piece of chocolate. Likewise, everything she did and taught through her actions was centred around punctuality and a healthy lifestyle. On reflection, I have absorbed so many of her values without realising it and I am eternally grateful for that. This realisation was heightened during my last visit to Sri Lanka, from which I came away with memories of Ammamma that I treasure.

I will always remember her incredible narrating skills and how, every day when I was in Sri Lanka, I would attempt to start her talking and get her going on her stories, for there was no greater pleasure than listening to her wisdom. I will always remember how, when asked for a story, she would gaze into the distance, searching through a lifetime of experience while absent-mindedly drumming her fingers on the edge of the bed. I will always remember the stark contrast between her slow and sure physical movements and her rapid, astute mind which was evident whenever she spoke.

I will always remember, on walking into Ammamma's room the first day of my last visit to Sri Lanka and sitting beside her, how she immediately grasped my hands almost instinctively. I realised at that moment how much I had missed her. We often fail to appreciate things in life until they are no longer there.

While I will always miss Ammamma very much, I know that we will always remember her in our hearts by carrying on her legacy through what we learnt from her.

**Sujeevan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PERIMAMI

We are very sad that Perimami has passed away after a short illness. When we saw her in Trincomalee earlier this year she was managing her not so serious ailments, carefully looked after by daughter Anusuya and family, and we did not expect her health to deteriorate so suddenly. After her children settled into their lives with their own children and after the departure of Perimama two years back, she often said that she had done everything she wanted to do in life.

When we were children in the 1940's our mother used to tell us about her grand wedding in the 1930's and we were yearning for a wedding in our family. This came about in 1948 when Perimama, our mother's brother, married Perimami. It was indeed a grand and memorable wedding and we remember how happy we all were, especially our grandparents. Since then Mami has been fully involved with our family, additionally as the mother-in-law of the youngest of us. Further, Perimami's family, including her parents when they were alive, have been part of our extended family.

Perimami was always kind and hospitable and a constant support to Perimama. During his career in the Government Survey Department she moved with him to postings in various parts of Sri Lanka and we often stayed with them at these places, enjoying their hospitality. Mami was always at the side of Perimama whenever he took an important part in religious ceremonies at Maruthady Vinayagar Temple in Manipay as the chairman of the management committee of the temple.

The loss of their son Sivabalan in his prime in 1979 was a great tragic shock in the lives of Perimama, Perimami and their



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

children and has been a source of sadness to all of us in the family. In spite of being at a very low point, Mami devoted herself to bringing up their three school-going younger daughters. How all the daughters have turned out is testament to Perimami's dedication, resulting in contentment and happiness to the parents in later years. All four daughters have imbibed the family values, including hospitality, from their mother.

Perimami was a highly disciplined person with modest requirements but she had unshakably firm ideas about what she did not want and we admired her for this. We convey our condolences to Mami's daughters Yasodha, Vasuki, Anusuya and Devaki, to their children and to Mami's three sisters.

May she rest in peace.

**Sridas**
**Sriharan**
**Gowri**
**Sriskanthan**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PERIAMMAH

"Periammah" we affectionately called her. When we lived in Uduvil many years ago, we remember visiting Periammah and family regularly, since they lived very close to our house.

Since our Ammah does not have siblings, we were very close to our Appah's siblings. We were very sad when Periappah passed away just over two years ago and sadly Periammah has also left us too soon. Yet we can console our cousins, Yasodha, Vasuki, Anusuya and Devaki, that both their father and mother led a full, long and happy life together.

We still remember, when we spoke with Periammah lately about life in Trinco, she told us that technology had improved vastly and everyone has cell phones. Even the person who comes to pluck coconuts calls his wife while on the tree, about buying fish for curry that day!

Our Ammah was very close to Periammah and sadly she has lost her best friend and our Appah has lost his only sister-in-law. Although they had not seen each other for a while, Periammah was always in touch with our Ammah on a regular basis from Trinco.

We will always cherish the beautiful memories of Periammah. Today and always, may loving memories bring you Peace, Comfort and Strength.

**Usha**
**Vinobha**
**Geetha**
**Suthan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY MAMI

As the eldest son in my family I was very attached to my parents and siblings. For that reason, when I got married, it was difficult leaving the home where I was brought up. However my Mami made that transition significantly easier. She welcomed me into her family with open arms. It did not take long for me to start seeing her as my second mother.

Mami was a completely selfless, genuine, and compassionate individual. I feel so blessed to have had such an amazing mother-in-law. While Mami was not particularly loquacious, anything she did say always left a lasting impression on her listeners. I really admired her commitment to her children and grandchildren. She took meticulous care of them, reflecting her honesty, sense of discipline, and unconditional love.

Although she has left us physically, her wisdom and kindness will always remain with us for years to come as a source of inspiration.

May she rest in peace.

**Tharmarajan**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thoughts On Conscience

Conscience: A small, still voice that makes minority reports. Everyone in daily life carries such a heavy, mixed burden on his own conscience that he is reluctant to penalize those who have been caught.

It is an accepted law of ethics that punishment in the Court of Conscience, unlike that in Courts of Law, lessens with each repeated and unrebuked offense.

A disciplined conscience is a man's best friend. It may not be his most amiable, but it is his most faithful monitor.

Reason often makes mistakes, but conscience never does. Wisdom and beauty are the twin arches of that invisible bridge which leads from the individual conscience-ever rebellious against its destiny-to man's collective conscience, ever in search of general progress.

When it was seen that many of the wicked seemed quite untroubled by evil conscience ... then the idea of future suffering was advanced.

A quiet conscience makes one so serene.

It is far more important to me to preserve an unblemished conscience than to compass any object however great.

Whatever is done without ostentation, and without the people being witnesses of it, is, in my opinion, most praiseworthy: not that the public eye should be entirely avoided, for good actions desire to be placed in the light; but notwithstanding this, the greatest theater for virtue is conscience.

The truth is not so much that man has conscience as that conscience has man.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A magazine editor recently asked me to sit down on my 40th birthday and write an article on the most important things I had learned in my first 40 years. I told him that the chief thing I had learned was that the copybook maxims are true, but that too many people forget this once they go out into the heat and hustle and bustle of the battle of life and only realize their truth once one foot is beginning to slip into the grave. The man who has won millions at the cost of his conscience is a failure.

A quiet conscience sleeps in thunder.

Conscience admonishes as a friend before punishing us as a judge.
If your conscience won't stop you, pray for cold feet.

The Anglo-Saxon conscience doesn't keep you from doing what you shouldn't, it just keeps you from enjoying it.

Whence do I get my rules of conduct? I find them in my heart. Whatever I feel to be good is good. Whatever I feel to be evil is evil. Conscience is the best of casuists.

The foundation of the true joy is in the conscience.
Whoever attempts to suppress liberty of conscience finishes some day by wishing for the Inquisition.

There is no witness so terrible-no accuser so powerful as conscience which dwells within us.

Conscience is God's presence in Man.

It is truly enough said that a corporation has no conscience; but a corporation of conscientious men is a corporation with a conscience.

Labor to keep alive that little spark of celestial fire, called conscience.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி



| | | |
|---|---|---|
| தாய் தந்தை | : | அப்புக்குட்டி செல்லப்பா<br>தங்கமுத்து<br>(கொல்லன் கலட்டி, தெல்லிப்பளை) |
| பெயர் | : | பரம்சோதி |
| பிறப்பு | : | 17.08.1928 |
| சகோதரர்கள் | : | சிவசோதி<br>மலர்சோதி<br>ஜெயசோதி<br>இராமச்சந்திரன் |
| கணவர் | : | சிவகுருநாதர்<br>(நில அளவை உதவி அத்தியட்சகர்<br>மானிப்பாய்) |
| மாமன் மாமி | : | சண்முகம்<br>இளையபிள்ளை<br>(சங்குவேலி தெற்கு மானிப்பாய்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் : 28.08.1948

பிள்ளைகள் : யசோதா
சிவபாலன்
வாசுகி
அனுசுயா
தேவகி

மருமக்கள் : சிறிஸ்கந்தன்
தர்மராஜன்
ஜனகன்
ஜெயமனோகரன்

மைத்துனர் : சிவக்கொழுந்து
சாம்பசிவம்

பேரப்பிள்ளைகள் : கஜன் + லக்ஷாயினி
கஜானி
சரண்யா
சாரங்கன்
ஆதித்தியா
சுஜிவன்
விபூசனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேற்றம்

## வருந்த வேண்டா

"இவன் பிறப்பதுமில்லை இவன் ஒருமுறை இருந்து
பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன்
பிறப்பற்றான் அனவரதன் இவன் சாசுவதன்
படையோன், உடம்பு கொல்லப்படுகையில்
இவன் கொல்லப்பட்டான்"

"நைந்த துணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு மனிதன்
புதிய துணிகள் கொள்ளுமாறு போல — ஆத்மா
நைந்த உடல்களைக் களைந்து
புதியவற்றை எய்துகிறான்!"

"இவனை ஆயுதங்கள் வெட்டமாட்டா, தீ எரிக்காது
நீர் இவனை நனைக்காது காற்று உலர்த்தாது!"

"உயிர்களின் ஆரம்பம் தெரியவில்லை
நடுநிலைமை தெளிவுடையது
இவற்றின் இறுதியும் தெளிவில்லை
இதில் துயர் படுவதென்ன?"

"எல்லோர் உடம்பிலுமுள்ள இந்த ஆத்மா
கொல்ல முடியாதவன் - ஆதலால் நீ எந்த
உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா!"

- பகவத் கீதை -

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்..........

துயரங்களைப் பகிர்ந்து விட்டு
தூயவளாய் உதிர்ந்து போன
எம் அன்புத்தாயின்
மரணச் செய்தி கேட்டு
விரைந்தோடி வந்து தம்மாலியன்ற சகல உதவிகளையும்
செய்தவர்களுக்கும், நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும்
தேறுதல் வார்த்தைகளைத் தெளித்தவர்களுக்கும், அன்னாரின்
இறுதிக்கிரியைகளின் போது தோளோடு தோள் நின்று
துணைபுரிந்தவர்களுக்கும் உள்ளத்தின் உருக்கங்களை
கண்ணீர் அஞ்சலி மற்றும் இரங்கலுரை மூலம்
வெளிப்படுத்திய கல்விச் சமூகத்திற்கும், இம்மலருக்கான
ஆக்கங்களை சமர்ப்பித்த உள்ளங்களிற்கும்
குறுகிய காலத்தில் இம்மலரை அழகுற அச்சிட்டுத் தந்த
SS Digital's பதிப்பகத்தற்கும் எம் இதயங்கனிந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்



112, கந்தசாமி கோவில் வீதி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரம்

நான் வல்லமை வேண்டுமென கேட்டேன். அவர் கஸ்டங்களைத் தந்தார். என்னை வலிமையானவனாக ஆக்கிக் கொள்ள...

நான் நல்லறிவு வேண்டி நின்றேன். அவர் தீர்வு காண்பதற்காக பிரச்சனைகள் பலவற்றை என்முன்னே வைத்தார்...

நான் வன்மை வேண்டுமென ஆசைப்பட்டேன் அவர் உழைத்து வேலை செய்யத் திறமையும் அறிவும் தந்தார்...

நான் மனோபலம் வேண்டுமென கேட்டேன் அவர் ஆபத்துக்களை என் முன்னே கொண்டு நிறுத்தினார்...

கடவுளிடம் அன்பைக்கேட்டேன் அவர் அன்பு காட்டி உதவி செய்ய துன்பப் பட்டவர்கள் அருகில் என்னை அனுப்பி வைத்தார்...

நான் சில சௌபாக்கியங்களையும் வளங்களையும் கேட்டேன். அவர் வாய்ப்புக்களை மட்டும் உருவாக்கித்தந்தார்...

நான் கேட்ட எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் எனக்குத் தேவையானது எல்லாம் எனக்கு கிடைத்தது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SS Digital
0262224933,07776956